# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் **சிறப்புக்கூட்டம்** 2012 ஜுலை திங்கள் 19.07.2012–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**
நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் அவசர சிறப்பு தீர்மானம் :

தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் கன்னியாகுமரி மாவட்டத்தின் வருவாய் கிராமங்கள் நிர்வாக வசதிக்காகவும், பொதுமக்களின் சிரமங்களை குறைக்கும் வகையிலும் மேலும் 107 வருவாய் கிராமங்கள் விரைவில் உருவாக்கப்பட இருக்கின்றது.

இந்த நேரத்தில் நமது மாவட்ட மக்களின் பன்னெடுங்கால கோரிக்கைகளில் ஒன்றான குளச்சலை தலைமையிடமாகக் கொண்டு கல்குளம் தாலுகாவின் சில பகுதிகளை உள்ளடக்கி குளச்சல் தாலுகா அமைக்கும் பணியை தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் விரைந்து பரிசீலித்து அதிவிரைவில் குளச்சல் தாலுகா அமைக்க அரசு உத்தரவு பிறப்பிக்க தமிழக அரசை இந்நகர்மன்றம் அவசர சிறப்பு தீர்மானம் மூலம் வலியுறுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

குளச்சல் தாலுகா அமைந்தால் பயன்பெறப்போகும் பகுதிகளாக பேரூராட்சி பகுதிகளான ரீத்தாபுரம், பாலப்பள்ளம், திக்கணங்கோடு, கல்லுக்கூட்டம், மண்டைக்காடு, மணவாளக்குறிச்சி மற்றும் சைமன்காலனி ஊராட்சி பகுதிகளைச் சார்ந்த சுமார் இரண்டு லட்சம் பொதுமக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

குளச்சல் நகரில் அரசு பொது மருத்துவமனை, காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம், கிராம அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், தலைமை தபால் நிலையம், தொலைபேசி நிலையம், தொடக்க கல்வி அலுவலகம், மின்சார வாரிய அலுவலகம், அரசுடைமை வங்கிகள் மற்றும் பாண்டியன் கிராம வங்கி, தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, ATM சென்டர்கள், தொலை தொடர்பு அலுவலகம், துறைமுக அலுவலகம், மீனவர் பயிற்சி கல்லூரி, அரசு உதவிபெறும் கல்விக்கூடங்கள், பனைவெல்ல கூட்டுறவுச் சங்கம் விரைவில் முழு வடிவம் பெறப்போகும் குளச்சல் மீன்பிடித் துறைமுகம் முதலானவை இருப்பது இந்நகரின் சிறப்பம்சம். அதுபோல் பஸ்நிலையம் மற்றும் போக்குவரத்துக் கழக பணிமனை அருகில் நுகர்பொருள் வாணிபக் கழக குடோன், பகவதி அம்மன் திருக்கோவில், இந்திய அரிய மணல் ஆலை, குளச்சல் கடலோர காவல் நிலையம், போர் நினைவுச் சின்னம் ஸ்தூபி, குளச்சல் கடலோரப் பகுதியை உள்ளடக்கிய மத்திய பகுதி ஆகியவை இப்பகுதியில் அமைந்துள்ளது. மேலும் சிறப்பு சேர்க்கும் அம்சங்கள் குளச்சல் நகராட்சி, குளச்சல் சட்டமன்ற தொகுதி என அமைந்துள்ளது மேலும் சிறப்பு.

எனவே பல்வேறு பகுதிகளுக்கு பயன்தரும் வகையிலும், நிர்வாக வசதிக்காகவும் குளச்சலை தலைமையிடமாகக் கொண்டு குளச்சல் நகரில் குளச்சல் தாலுகா அமைய தமிழக முதல்வர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி பரிசீலித்து விரைவில் குளச்சல் தாலுகா பற்றிய அறிவிப்பை வெளியிடுமாறு தமிழக அரசையும், மாவட்ட நிர்வாகத்தையும் இம்மன்றம் மீண்டும் வலியுறுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் . ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் **அவசரக்கூட்டம்** 2012 ஜுலை திங்கள் 19.07.2012–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள இரு கடைகளின் உரிமக் காலம் 31.03.2012–ல் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைகளுக்கான உரிம காலத்தினை 01.04.2012 முதல் 31.03.2015 முடிய மேலும் மூன்றாண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும், தற்போதைய மாத வாடகையிலிருந்து 15% உயர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | க.எண். | உரிமதாரர் பெயர் | தற்போதைய வாடகை ரூ. | 01.04.2012 முதல் 31.03.2015 முடிய வாடகை – ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 37 | திரு.சகாய ஜாண் ஜில்ட் | 4428 | 5092/– |
| 2 | 38 | திரு.சகாய ஜாண் ஜில்ட் | 748 | 860/– |

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.அ1/440/2004)

**தீர்மானம் எண்.293 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகராட்சி அனுமதி பெறாத லேஅவுட்களில் வீட்டுமனைகள் விற்பனை செய்யப்படுவது தொடர்பான அறிவிப்பினை தினமலர், தினகரன் மற்றும் தினத்தந்தி நாளிதழ்களில் விளம்பரம் செய்த தொகை ரூ.7,680/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi/3/1998)

**தீர்மானம் எண்.294 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IUDM) **2012–13–ன்கீழ்** திட்டத்தின் **ரூ.120.00** இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் ஓடை கட்டும் பணிக்காக சமர்ப்பிக்கப்பட்ட திட்ட பிரேரணையில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்து மீள சமர்ப்பிக்கவும், மேற்படி திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள ஏனைய பணிகளுக்கு **13.02.2012–ல்** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிய திட்டப் பிரேரணையின்படி டுபிட்கோ, சென்னை நிறுவனத்திற்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விரிவான திட்ட அறிக்கை (DPR) சமர்ப்பிப்பதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| **I** | **சாலைப்பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட முகைதீன்பள்ளி சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 12.00 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு குறுக்குத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 3.00 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட செட்டியத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 10.50 |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட வண்ணாத்திவிளையில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 6.20 |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை குறுக்குத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 7.45 |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு கடற்கரை சாலையில் ஆர்.சி.கோயில் அருகில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 27.00 |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட பவுண்டரி சாலையில் தார்தளம் அமைத்தல். | 17.60 |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட தைநாத்தன்கரை சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 15.00 |
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமி காலனி முதல் ஆசாத்நகர் சாலை வரை தார்ச்சாலை அமைத்தல். | 2.90 |
| 10 | இந்நகராட்சிக்குட்பட்ட மலிக்காகிணறு சாலையில் தார் சாலை அமைத்தல். | 7.40 |
| 11 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு அந்தோணியார் குருசடி அருகில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 2.90 |
| 12 | இந்நகராட்சிக்குட்பட்ட தும்பக்காட்டுவிளையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 6.80 |
| 13 | இந்நகராட்சிக்குட்பட்ட அழகனார்கோட்டைவிளை மற்றும் கணியாக்குடி முதல் பாம்பூரி வாய்க்கால் சாலை வரை சிமெண்ட் தளம் அமைத்தல். | 6.00 |
| 14 | இந்நகராட்சிக்குட்பட்ட தொலைபேசி நிலைய சாலையில் தார் சாலை அமைத்தல். | 5.25 |
| | **மொத்தம்** | **130.00** |
| **II** | **வடிகால் ஓடை பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட திக்கணங்கோடு சாலையில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் மேல்மூடி அமைத்தல். | 25.00 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி சந்திப்பு முதல் களிமார் பாலம் வரை மழைநீர் வடிகால் ஓடை மற்றும் மேல்மூடி அமைத்தல். | 25.00 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு சாஸ்தா கோவில் முதல் களிமார் பாலம் வரை மழைநீர் வடிகால் ஓடை மற்றும் மேல்மூடி அமைத்தல். | 70.00 |
| | **மொத்தம்** | **120.00** |
| **III** | **திடக்கழிவு மேலாண்மை பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான காம்பாக்டர் லாரிக்கான குப்பை கொட்டும் பிளாஸ்டிக் தொட்டிகள் வினியோகம் செய்தல் | 18.00 |
| 2 | இந்நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் வேலி அமைத்தல் மற்றும் விஞ்ஞான ரீதியில் நிரப்பும் பணி (Scienctific land filling arrangements ) செய்தல். | 32.00 |
| | **மொத்தம்** | **50.00** |
| **IV** | **தெருவிளக்கு பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குறித்த நேரத்தில் இயங்கும் தெருவிளக்கு தானியங்கி சுவிட்ச் விநியோகம் மற்றும் பொருத்துல் ( Automatic ON/ OFF Street timer Switch ) | 7.50 |
| 2 | 20 Watts, LED விளக்குகள் மற்றும் உபகரணங்கள் வினியோகம் செய்தல் மற்றும் பொருத்துதல். | 20.40 |

| | | |
|---|---|---|
| 3 | 20 Watts மின்கலம் மற்றும் மின்கம்பத்துடன் கூடிய சூரிய ஒளி விளக்கு பொருத்துதல். | 6.00 |
| 4 | அலுமினியம் ( Lifting Ladder) ஏணி வாங்குதல் | 1.20 |
| 5 | 90 Watts 4 எண்ணங்கள் LED விளக்குகளுடன் கூடிய சிறிய உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல். | 5.00 |
| 6 | சூரிய ஒளியிலிருந்து 30 கிலோ வாட்ஸ் தயாரிக்கும் அமைப்பு நிறுவும் பணி செய்தல். | 31.90 |
| | **மொத்தம்** | 72.00 |
| **V** | **குடிநீர் விநியோகப் பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் மற்றும் காணிக்கை மாதா கோயில் அருகில் பழுதடைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு பதிலாக 2/3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல். | 60.00 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் முதல் துறைமுகத்தெரு வரை 6'' பிவிசி குடிநீர் விநியோக பிரதான குழாய் அமைத்தல். | 15.00 |
| 3 | குடிநீர் விநியோகப் பணிக்கு தேவைப்படும் 200 KVA ஜெனரேட்டர்கள் 2 எண்ணங்கள் வாங்குதல் | 75.00 |
| | **மொத்தம்** | 150.00 |
| **VI** | **மிருகவதை கூடப் பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட இந்திராகாலனியில் மிருகவதைக் கூடம் (Slaughter house) கட்டுதல். | 50.00 |
| | **மொத்தம்** | **50.00** |
| **VII** | **அலுவலக கட்டிடப் பணிகள்** | |
| 1 | இந்நகராட்சியின் தற்போதைய அலுவலக கட்டிடத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் செய்தல். | 25.00 |
| | **மொத்தம்** | **25.00** |
| **VIII** | **வணிக வளாகப் பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தையில் நிரந்தர கடைகள் கட்டுதல் பணி. | 50.00 |
| | **மொத்தம்** | **50.00** |

மேற்காணும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) சமர்ப்பிப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2750/2012)

**தீர்மானம் எண்.295 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சியில் 12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ.12,50,000/– இலட்சம் மதிப்பீட்டில் குப்பைகளை அகற்றுவதற்காக 7 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட காம்பாக்டர் கூண்டு கட்டுதல் மற்றும் உபகரணங்கள் பொருத்துதல் பணிக்கு 04.06.2012–ல் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ON/OFF line மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. தொழில் நுட்ப பரிசீலனைக்கு பின் தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளவர்கள் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/S. காம் அவைடா என்விரோ இன்சினியரிங் பிரைவேட் லிமிடெட் புனே – 411057 | (ரூ. 11,93,000/–) மதிப்பீட்டைவிட 0.95% குறைவு. |

| | | |
|---|---|---|
| 2 | M/S.T.P.S.இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் நுங்கம்பாக்கம், சென்னை –600 034 | (ரூ. 10,00,000/–) மதிப்பீட்டைவிட 16.98% குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 16.98% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.T.P.S.இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட், நுங்கம்பாக்கம், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.79, நாள்.24.01.2012–ன்படி ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.
2.மதிப்பீட்டை விட 16.98% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.T.P.S.இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட், நுங்கம்பாக்கம், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/104/2006)

**தீர்மானம் எண்.296 . அலுவலக குறிப்பு ஏற்று குறைந்த புள்ளியை ஏகமனதாக ஏற்றுகொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011–12–ன்கீழ் சிப்பம் எண்.7–ல் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்காக குப்பைகளை அள்ள தேவையான 1 மெட்ரிக் டன் குப்பை அள்ளும் மின்கலத்தில் இயங்கும் சிறிய டிப்பர் வாகனம் இரண்டு ரூ.11,00,000/– இலட்சம் மதிப்பீட்டில் வினியோகம் செய்வதற்கு 04.06.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப பரிசீலனைக்கு பின் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளவர் பெயர் மற்றும் முகவரி | சிப்பம் எண். | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | M/S.D.இன்சினியரிங் கம்பெனி, கோவை | 7 | 1064728.00 | மதிப்பீட்டைவிட15.47% குறைவு. **(ரூ.9,00,000/–)** |
| 2 | M/S. கேரி ஆல்கார் பிரைவேட் லிமிடெட் கோடம்பாக்கம், சென்னை. | 7 | 1064728.00 | மதிப்பீட்டைவிட15.85% குறைவு. **(ரூ.8,96,000/–)** |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 15.85% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. கேரி ஆல்கார் பிரைவேட் லிமிடெட், கோடம்பாக்கம், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.116, நாள்.29.02.2012–ன் மூலம் ஏற்கனவே நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
2. மதிப்பீட்டை விட 15.85% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. கேரி ஆல்கார் பிரைவேட் லிமிடெட், கோடம்பாக்கம், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.297 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுகொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சியில் 12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ.8,20,000/– இலட்சம் மதிப்பீட்டில் குப்பைகளை அகற்றுவதற்கு காம்பாக்டர் லாரிக்கு தேவையான 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட 32 எண்ணங்கள் வர்ணம் பூசப்பட்ட குப்பை தொட்டிகள் (Compactor Refuse Bins)

வினியோகம் செய்வதற்கு 04.06.2012 அன்று மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ON/OFF line மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதிகள் பரிசீலிக்கப்பட்டது. தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளவர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/S. நீல் கமல் லிமிடெட், மும்பை – **600 093** | மதிப்பீட்டைவிட 18.58% குறைவு. **(ரூ.6,51,360/– )** |
| 2 | M/S.ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூார் **– 632 006.** | மதிப்பீட்டைவிட 20.16% குறைவு. **(ரூ.6,38,720/– )** |
| 3 | M/S.கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட், சேலம் **– 636 005.** | மதிப்பீட்டைவிட 8.80% குறைவு. **(ரூ. 7,29,600/– )** |
| 4 | M/S.KMS பிளாஸ்ட் வேல்ட் (பி) லிமிடெட், சென்னை – **600 002.** | மதிப்பீட்டைவிட 2.50% கூடுதல். **(ரூ. 8,20,000/– )** |
| 5 | M/S.ஏசியா டெக் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ், நாகர்கோவில். | தயாரிப்பாளர், வினியோகஸ்தர் சான்றிதழ் இல்லாத காரணத்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. |

மேற்படி ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதிபெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 20.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூார் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:**

**1.** மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.79, நாள்.**24.01.2012–**ன் மூலம் ஏற்கனவே இந்நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**2.**மதிப்பீட்டை விட **20.16%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூார் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/104/2006)

**தீர்மானம் எண்.298 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுகொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சியில் 12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ.1,35,000/–இலட்சம் மதிப்பீட்டில் குப்பைகளை அகற்றுவதற்கு தேவையான 15 எண்ணங்கள் நான்கு சக்கர குப்பை வண்டி (Push & Pull Carts) வினியோகம் செய்வதற்காக 04.06.2012 அன்று மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ON/OFF line மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதிகள் பரிசீலிக்கப்பட்டது. தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளவர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/S.ஏசியா டெக் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ், நாகர்கோவில். | தயாரிப்பாளர், வினியோகஸ்தர் சான்றிதழ் இணைக்கப்படவில்லை. எனவே ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. |
| 2 | M/S. நீல் கமல் லிமிடெட், மும்பை. | மதிப்பீட்டைவிட **42.62%** கூடுதல். **(ரூ.1,92,544.80 /– )** |
| 3 | M/S.வெங்கடேஸ்வரா வி.ஐ.பி. எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் | மதிப்பீட்டைவிட **1.67%** குறைவு. **(ரூ. 1,32,750/– )** |
| 4 | M/S.ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூார். | மதிப்பீட்டைவிட **1. 22%** குறைவு. **(ரூ. 1,33,350/– )** |

மேற்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதிவாய்ந்தவை. அவற்றில் மதிப்பீட்டைவிட 1.67% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.வெங்கடேஸ்வரா வி.ஐ.பி. எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : 1. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.79, நாள்.24.01.2012—ன் மூலம் ஏற்கனவே இந்நகர்மன்ற ஒப்புதல் அளித்துள்ளது.
2.மதிப்பீட்டை விட 1.67% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.வெங்கடேஸ்வரா வி.ஐ.பி. எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/104/2006)

**தீர்மானம் எண்.299 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுகொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சியில் 12—வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ.1,80,000/— இலட்சம் மதிப்பீட்டில் குப்பைகளை அகற்றுவதற்கு தேவையான இரண்டு சக்கர குப்பை வண்டி (Wheel Borrows) 15 எண்ணங்கள் வினியோகம் செய்வதற்கு 04.06.2012 அன்று மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ON/OFF line மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளவர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/S.ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர். | மதிப்பீட்டைவிட 10.83% குறைவு. (ரூ.1,60,500 ) |
| 2 | M/S. நீல் கமல் லிமிடெட், மும்பை. | மதிப்பீட்டைவிட 11.67% குறைவு. (ரூ.1,59,000/— ) |
| 3 | M/S.வெங்கடேஸ்வரா வி.ஐ.பி. எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர். | மதிப்பீட்டைவிட 2.50% குறைவு. (ரூ. 1,75,500/—) |
| 4 | M/S.KMS பிளாஸ்ட் வேல்ட் (பி) லிமிடெட், சென்னை. | மதிப்பீட்டு விலைவிகிதம். (ரூ. 1,80,000/— ) |
| 5 | M/S.ஏசியா டெக் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ், நாகர்கோவில். | தயாரிப்பாளர், வினியோகஸ்தர் சான்றிதழ் இணைக்கப்படவில்லை. ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. |
| 6 | திரு.ஆர்.மதுசூதனன் | எவ்வித சான்றிதழும் இணைக்கப் படவில்லை. எனவே ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. |

மேற்படி ஆறு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 11.67% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. நீல் கமல் லிமிடெட், மும்பை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு: 1. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.79, நாள்.24.01.2012—ன் மூலம் ஏற்கனவே இந்நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
2.மதிப்பீட்டை விட 11.67% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. நீல் கமல் லிமிடெட், மும்பை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/104/2006)

**தீர்மானம் எண்.300 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுகொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011–12–ன்கீழ் சிப்பம் எண்.6–ல் ரூ.32,00,000/–இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் சேகரிக்கப்படும் குப்பைகளை கொண்டு மண்புழு உரம் தயாரிக்கவும், குப்பைகளை மக்க வைத்து இயற்கை உரம் தயாரிக்கவும் மற்றும் குப்பைகளை பிரித்து மக்காத குப்பைகளை மறுசுழற்சிக்கு அனுப்பவும், இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள லியோன்நகர் உப்பளம் புறம்போக்கு நிலத்தில் தேவையான கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு 04.06.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் தொழில்நுட்ப பரிசீலனைக்கு பின்னர் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளவர் பெயர் மற்றும் முகவரி | சிப்பம் எண். | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.சி.தேவகரிம்சேம், உடையார்விளை. | 6 | **3069839.32** | மதிப்பீட்டைவிட**2.65%** கூடுதல். **(ரூ.31,51,072/–)** |
| 2 | திரு.T.ஜாண்ரெக்ஸ்லின்ஜோஸ் செந்தறைவிளாகம், ரீத்தாபுரம். | 6 | **3069839.32** | மதிப்பீட்டைவிட**0.01%** குறைவு. **(ரூ.30,69,459/–)** |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.01%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண்ரெக்ஸ்லின்ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.**116**, நாள்.**29.02.2012**–ன் மூலம் ஏற்கனவே நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
2. மதிப்பீட்டை விட **0.01%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண்ரெக்ஸ்லின்ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.301 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுகொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011–12–ன்கீழ் சிப்பம் எண்.8–ல் ரூ.12,00,000/– இலட்சம் மதிப்பீட்டில் தெருவிளக்கு மின்கம்பங்களில் ஏற்கனவே உள்ள 40W குழல் விளக்கு, 250W சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக மின்சேமிப்பு விளக்குகள் (CFL/LED) மற்றும் தானியங்கி டைமர் சுவிட்சுகள் வினியோகம் மற்றும் பொருத்துதல் பணிக்கு 04.06.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் தொழில்நுட்ப பரிசீலனைக்கு பின்னர் தெரிவு செய்யப்பட்ட மூன்று ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளவர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/S.தீபம் இன்சினியரிங் கம்பெனி, சென்னை. | இனம் 1 மற்றும் 2–க்கு (CFL விளக்குகள்) மதிப்பீட்டைவிட **55.36%** கூடுதல். **(:ரு.4,52,000/– )** இனம் **3, 4, 5, 6, 7** மற்றும் **8** (LED விளக்குகள்) மதிப்பீட்டை விட 5.39% குறைவு. **(ரூ.6,56,250/– )** இனம் **9** (தானியங்கி டைமர் சுவிட்ச்) மதிப்பீட்டை விட 5.26% கூடுதல். **(ரூ.2,17,500/– )** |
| 2 | M/S. ஓம்ஸ்ட்ரானிக்ஸ் லைட்டிங் | இனம் 1 மற்றும் 2–க்கு (CFL விளக்குகள்) |

| | | |
|---|---|---|
| | சொலியூசன்ஸ், சென்னை. | மதிப்பீட்டைவிட 3.17% குறைவு.<br>(:ரு.2,82,000/– )<br>இனம் 3, 4, 5, 6, 7 மற்றும் 8 (LED விளக்குகள்)<br>மதிப்பீட்டை விட 1.46% கூடுதல்.<br>(ரூ.7,03,750/– )<br>இனம் 9 (தானியங்கி டைமர் சுவிட்ச்)<br>மதிப்பீட்டை விட 3.08% கூடுதல்.<br>(ரூ. 2,13,000/– ) |
| 3 | M/S.ஜே.இ.எஸ்.எலக்ட்ரிக்கல்ஸ்,<br>திருத்துவபுரம். | இனம் 1 மற்றும் 2–க்கு (CFL விளக்குகள்)<br>மதிப்பீட்டைவிட 6.09% கூடுதல்.<br>(:ரு. 3,09,000/– )<br>இனம் 3, 4, 5, 6, 7 மற்றும் 8 (LED விளக்குகள்)<br>மதிப்பீட்டை விட 3.61% கூடுதல்.<br>(ரூ.7,18,700/– )<br>இனம் 9 (தானியங்கி டைமர் சுவிட்ச்)<br>மதிப்பீட்டை விட 0.18% குறைவு.<br>(ரூ. 2,06,250/– ) |
| 4 | M/S. ஜே.எஸ்.பி.பவர் லைட்ஸ்,<br>திருநெல்வேலி. | இரண்டு உறைகளில் தனித்தனியாக தொழில் நுட்ப தகுதி மற்றும் விலைப்புள்ளி சமர்ப்பிக்க வில்லை. எனவே நிராகரிக்கப்பட்டது. |

மேற்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதி வாய்ந்த மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் இனம் 1 மற்றும் 2–க்கு ( CFL விளக்குகள் மற்றும் உபகரணங்கள்) M/S. ஓம்ஸ்ட்ரானிக்ஸ் லைட்டிங் சொலியூசன்ஸ், சென்னை நிறுவனத்தின் மதிப்பீட்டை விட 3.17% ஒப்பந்தப்புள்ளி குறைவானது, இனம் எண்.3,4, 5, 6, 7 மற்றும் 8–க்கு (LED விளக்குகள் மற்றும் உபகரணங்கள் ) M/S.தீபம் இன்சினியரிங் கம்பெனி, சென்னை நிறுவனத்தின் மதிப்பீட்டை விட 5.39% ஒப்பந்தப்புள்ளி குறைவானது, இனம் எண். 9–க்கு (தானியங்கி டைமர் சுவிட்ச்) M/S.ஜே.இ.எஸ்.எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துவபுரம் நிறுவனத்தின் மதிப்பீட்டை விட 0.18% ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1. மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.116, நாள்.29.02.2012–ன் மூலம் ஏற்கனவே நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
2. மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.302 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுகொள்ளப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சியில் 12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான Deccan Chronicle மற்றும் மக்கள் குரல் ஆகிய பத்திரிக்கைகளில் வெளியிட்ட வகையில் ரூ.1,36,928/–ஐ வழங்க கேட்டு ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/104/2006)

**தீர்மானம் எண்.303 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குமுமம் 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள சிப்பம் எண். 6, 7, 8 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில

அளவிலான Indian Express மற்றும் டாக்டர் நமது எம்.ஜி.ஆர். ஆகிய பத்திரிக்கைகளில் வெளியிட்ட வகையில் ரூ.1,04,722/—ஐ வழங்க கேட்டு ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.304 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 12—வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் தேதியினை நிர்வாக மற்றும் தொழில் நுட்ப காரணங்களுக்காக 04.06.2012 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது தொடர்பான அறிவிப்பினை மாநில அளவிலான பத்திரிக்கைகளான Deccan Chronicle மற்றும் மக்கள் குரல் ஆகிய பத்திரிக்கைகளில் வெளியிட்ட வகையில் ரூ.26,849/—ஐ செலுத்த கேட்டு ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/104/2006)

**தீர்மானம் எண்.305 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011—12—ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள சிப்பம் எண். 6, 7, 8 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் தேதியினை நிர்வாக மற்றும் தொழில்நுட்ப காரணங்களுக்காக 04.06.2012 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது தொடர்பான அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி மலர் மூலம் மாநில அளவிலான பத்திரிக்கைகளான Indian Express மற்றும் டாக்டர் நமது எம்.ஜி.ஆர். ஆகிய பத்திரிக்கைகளில் வெளியிட்ட வகையில் ரூ.20,534/—ஐ செலுத்த கேட்டு ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.306 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பண்டகசாலைபுரத்தில் கதவு எண்.30/35—ன் முன்னால் மின்கம்ப எண். FII/42 வடிகால் ஓடையின் மத்தியில் உள்ளதால் மேற்கண்ட மின்கம்பத்தை மாற்றி அமைப்பதற்கு மதிப்பீட்டு கட்டணம் ரூ.9,200/— ஐ செலுத்த கேட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2587/2012)

**தீர்மானம் எண்.307 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18—ல் கதவு எண்.25/11—ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பை மனுதாரர் வெளியூர் செல்ல வேண்டியிருப்பதால் தற்காலிகமாக துண்டிப்பு செய்ய கோரியுள்ளார். மனுதாரருக்கு நிலுவை ஏதுமில்லை. எனவே மனுதாரரின் வேண்டுகோள் ஏற்று கதவு எண்.25/11—ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1486/2012)

**தீர்மானம் எண்.308 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 14–வது வார்டில் (துறைமுகத்தெரு கடைசியில்) மின்கம்ப எண். FII/59 போக்குவரத்து இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட மின்கம்பத்தை மாற்றி அமைப்பதற்கு மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.12,600/– ஐ செலுத்த கேட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2932/2012)

**தீர்மானம் எண்.309 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

## FORM-3
## MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் **சாதாரணக்கூட்டம்** 2012 ஜுலை திங்கள் 31.07.2012–ம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சியின் வரவு செலவு அறிக்கை 2011–12–ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2012–13–ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.பி1/5630/2011)

**தீர்மானம் எண்.310 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்துார் அவர்களின் கடிதம் ந.க.எண்.149/2012/Acct நாள் 10.07.2012–ல் இந்நகராட்சி 2012–13–ம் ஆண்டிற்கு செலுத்த

வேண்டிய பங்குத் தொகை ரூ. 50,000/— ம் செலுத்த தெரிவிக்கப்பட்டது. அதன்படி 2012—13—ம் ஆண்டிற்கான பங்குத் தொகை ரூ.50,000/— செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/1542/2001)

**தீர்மானம் எண்.311 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினிலாறி எண். TN-74-T.5508 வாகனம் சுமார் 42,000 கிலோ மீட்டர் ஓடிய நிலையில் நான்கு டயர்களும் தேய்வு ஏற்பட்டுள்ளது. எனவே ரீ பட்டன் போட்டு சரி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.16,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.எச்1/2913/2009)

**தீர்மானம் எண்.312 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited, (TNUIFSL) Chennai - நிறுவனத்தின் கடிதம் எண். TNUIFSL/kfw/SWD 2012-13 - நாள் 26.06.2012—ல் TNUIFSL நிறுவனத்தின் kfw Grant Fund –II- ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வடிகால் ஓடை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு மன்ற தீர்மான நகல் கோரப்பட்டுள்ளது. எனவே TNUIFSL நிறுவனத்தின் kfw Grant Fund –II-ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட தேவையான இடங்களில் வடிகால் ஓடை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்வதற்கும், தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2750/2012)

**தீர்மானம் எண்.313 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.சிவதாணுமாலையன் என்பவரின் வைப்புத் தொகை (ரூ.4000 + 4000 ) ரூ. 8000/— காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உரிய பதிவுகள் பதிவு செய்யப்பட்டு இருப்பில் உள்ளது. மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.பி1/7217/2011)

**தீர்மானம் எண்.314 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.சிவதாணுமாலையன் என்பவரின் வைப்புத் தொகை (ரூ.5000 + 5000 ) ரூ. 10,000/— காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உரிய பதிவுகள் பதிவு செய்யப்பட்டு இருப்பில் உள்ளது. மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.பி1/7215/2011)

**தீர்மானம் எண்.315 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.சிவதாணுமாலையன் என்பவரின் வைப்புத் தொகை ரூ. 2,150/— காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உரிய பதிவுகள் பதிவு செய்யப்பட்டு இருப்பில் உள்ளது. மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.பி1/7216/2011)

**தீர்மானம் எண்.316 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 23–வது வார்டு சிங்கன்காவு தெருவில் நகரபுல எண். P2-25/30, P2-25/20–ல் உள்ள 11.500 செண்ட் இடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வேண்டி பொது சாலை அமைப்பதற்கு கோட்டார் அஞ்சல், மேலபுதுத்தெருவில் வசிக்கும் திரு.செய்யது மீரான் ஆரிப் அவர்கள் மனைவி திருமதி. கதீஜாபீவி என்ற கதீஜா ஆரிப் அவர்கள் நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில் நன்கொடை பத்திரம் எண்.1023/2012–ன்படி நன்கொடை பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தினை நகராட்சி சொத்தாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அ.குறிப்பு**</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi/2008/2012)

**தீர்மானம் எண்.317 . <u>அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண்.9**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 23–வது வார்டு சிங்கன்காவு தெருவில் நகரபுல எண். P2-25/30–ல் உள்ள 3.00 செண்ட் இடத்தினை பாலப்பள்ளம் சரல்விளை முகவரியில் வசிக்கும் திரு.கிறிஸ்டோபல் அவர்கள் மகன் திரு. பால்ஜோஸ் என்பவர் நன்கொடை பத்திரம் நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில் நன்கொடை பத்திரம் எண்.1645/2012–ன்படி எழுதி கொடுத்துள்ளார். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அ.குறிப்பு**</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi/3043/2012)

**தீர்மானம் எண்.318 . <u>அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட 13–வது வார்டில் கதவு எண்.19/3 வீட்டின் அருகாமையில் அமைந்துள்ள மின்கம்பம் எண். சி.எம்.சி. 13/14 மிகவும் மோசமாக பழுதடைந்து பொது மக்களுக்கு எந்த நேரத்திலும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் காணப்படுவதாலும், மேற்படி மின்கம்பத்தில் தெருவிளக்கு போட இயலாமல் அப்பகுதி இருளில் மூழ்கி உள்ளதாலும், பழுதடைந்துள்ள மின்கம்பத்தை மாற்றி புதிய மின்கம்பம் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு**</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/3061/2012)

**தீர்மானம் எண்.319 . <u>அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண்.11**

இந்நகராட்சியில், ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குமுமம் 2012–13 திட்டத்தின்கீழ் ரூ.3.72 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பொறியாளர் பணியிடம் – 1 மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் பணியிடம் – 1 ஆகியவை மட்டுமே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பணி ஆய்வர் பணியிடம் தோற்றிவிக்கப்படாத காரணத்தால் திட்டப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு தேவையான பணியாளர்கள் இல்லாத சூழ்நிலை உள்ளது. மேலும் ஆணையாளர் பணியிடம் நிரப்பப்படாமல் உள்ளதால் ஆணையாளரின் பணிகளும் பொறியாளரால் கூடுதலாக கவனித்து வரப்படுகிறது. இதனால் கூடுதல் வேலை பளு காரணமாகவும், தேவையான தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும் திட்டப் பணிகளை முழுமையாக உரிய காலத்திற்குள் முடிக்க இயலாத சூழ்நிலையும், முடிவுற்ற பணிகளுக்கு முடிவு அறிக்கை மற்றும் பணிகளை முடிப்பதில் மேலும் காலதாமதமாகும் சூழ்நிலை உள்ளது. எனவே ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழும திட்டப் பணிகள் மற்றும் இதர திட்டப்பணிகளை விரைந்து செயல்படுத்துவதற்கு ஏதுவாக உதவி பொறியாளர் அல்லது இளநிலை பொறியாளர் பணியிடமும், பணி ஆய்வர் பணியிடமும், கணனி இயக்குபவர்/ இளநிலை உதவியாளர் தலா ஒரு பணியிடமும் புதிதாக தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு**</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.சி1/10698/2008)

**தீர்மானம் எண்.320 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வினியோக லாரி TN.74-Z.5304–ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக மேற்படி வாகனத்தின் பழுதுகளை ரூ.23,000/– மதிப்பீட்டில் சரி செய்வதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 249 நாள் 31.05.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 20.06.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. எனவே 06.07.2012 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | M/S.K.S.S.S.Automobiles,<br>Asaripallam Road,<br>Nagercoil. | 0.04% மதிப்பீட்டைவிட குறைவு.<br>(ரூ. 22,990/– ) |
| 2 | M/S.Money Motor Works,<br>Ozhuginasery,<br>Nagercoil. | 4.89% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ. 21,875/– ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 4.89% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5754/2010)

**தீர்மானம் எண்.321 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி